சோபக்ருத் ஞூ ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2023

மலர்: 6
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஆனி ச்ரவணம்





ஸ்ரீ:
சோபக்ருத் ஸ்ரீ ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2023
மலர்: 6
இதழ்: 4



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^3$ரி ஸமம் ஸ்தா$^2$நம் ப்$^3$ரஹ்மாண்டே$^3$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^3$வோ ந பூ$^4$தோ ந ப$^4$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

திருமயிலையில் ஸ்வாமி தேசிகனுக்கு நித்ய ஸேவை ஸாதித்துக் கொண்டும், ஸம்ப்ரதாய ஆசார்யர்களுக்கும் பக்தகோடிகளுக்கும் மங்களாசாஸனம் செய்யத் தோதாகவும் அர்ச்சையில் அலர்மேல்மங்கையுடன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருக்கும்படி. இவ்வளவால் அவனுடைய மனோரதம் பூர்த்தி ஆச்சுதா? எனில், இல்லை என்றுதான் சொல்லவேணும். தன்னுடைய ப்ரதிஷ்டா தின சதமான ஆண்டு விழாவை வ்யாஜமாக வைத்து, **ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலை திருவல்லிக்கேணி** எனத் தன் ஊரையிட்டே அடையாளம் காணும் திருவல்லிக்கேணி திவ்ய தேசத்தில் வாழும் மாந்தர்கள் ‘அடியேன் தொழ வந்தருளே’ என ப்ரார்த்தித்ததன் பேரில், **ஸகல மநுஜ நயன விஷயதாம் கத:** என்ற கணக்கிலே ஸேவை ஸாதிக்க ஸங்கல்பம் கொண்டான் போலும்!

திருமயிலை ஸ்ரீநிவாஸனின் இந்த **ப்ருந்தாரண்ய க்ஷேத்ர விஜயோத்ஸவத்தில்,** பெருமாளை அல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஆசார்ய ஸார்வபௌமர்களான ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீமத் ஆதிவண்சடகோபனும் எதிர் கொண்டழைத்து, மாடவீதிகளில் வலம் வந்து, அஹோபில மடத்திற்கு எழுந்தருளப்பண்ண வைகரியையும், அதனைத் தொடர்ந்த வைபவங்களையும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது; **அப்ராப்ய மநஸா ஸஹ,** என்பது நேரில் ஸேவித்து அநுபவித்த பாக்யவான்களின் ஒருமித்த கருத்தாகும். காலையில் விசேஷ திருமஞ்ஜனம் என்ன; ஸேவை-சாற்றுமறை என்ன; ப்ரஸாத விநியோகம் என்ன; மாலையில் இரு ஆசார்யர்களும் எதிரே அஞ்சலி ஹஸ்தத்துடன் எழுந்தருள, திருமயிலையப்பன் தன் தங்கத் தோளுக்கு-இனியானில் கம்பீரமாக அல்லிக்கேணி வீதிகளில் புறப்பாடு கண்டருளின வைபவம் என்ன; முன்பாக, பெரிய வீதிகளையும் மிகுநிறைத்த அருளிச்செயல் கோஷ்டி என்ன; ஒரு கோடி மறைகளெல்லாம் தொடர்ந்தோடின வைகரி என்ன.... அப்பப்பா, **யதோ வாசோ நிவர்த்தந்தே.** கண்ட அளவும் போய், காணாதவரும் வைத்துக் களிக்க, விழாவின் நிழற்படங்கள் இதோ!

இவ்விழாவினைத் தொடர்ந்து, ஏக தின ஸ்ரீஸுதர்சன ஹோமம், ஸ்ரீபாஞ்சராத்ர விற்பன்னர்களைக் கொண்டு விசேஷமாக ஸந்நிதி வளாகத்தில் அநுஷ்டிக்கப்பட்டது. ஏராளமான ஸேவார்த்திகள் கலந்துகொண்டு பயன்பெற்றார்கள்.

வழக்கமான கோடை உத்ஸவம், ஸ்ரீபெரியாழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள் வார்ஷிக உத்ஸவங்களும் சிறப்புற நடத்தப்பெற்றன.

இவ்வைபவங்களின் வண்ணப்படங்களையும் விசேஷக் கட்டுரைகளையும் இந்த ஸஞ்சிகையில் கண்டு களிக்கலாம். ❊

ஸ்ரீ:

# When All Roads Led to Thiruvallikkeni

## FROM THE DESK OF TRUSTEES

It is always an interesting and exciting experience when a long lingering wish becomes a reality. Brundaranya Kshetra Vijayotsavam is one such event, and hence it may be termed as a dream come true for many of us. To tweak Thirumangai Azhwar's words a little bit, we can say "மாடமாமயிலை ஸ்ரீநிவாஸனை திருவல்லிக்கேணியில் கண்டேனே!"

It was on July 8, 2023 (Saturday) that Lord Srinivasa, along with His Consorts, reached the Divyadesam by 8 a.m. to a grand reception by Swami Desikan and Srimath Adivan Satakopan of Sri Ahobila Mutt, Triplicane, followed by Thirumanjanam at Sri Ahobila Mutt. In the evening, there was a grand Mada Veethi Purappadu with Divya Prabandham, Yajur Vedam, Saama Vedam and Sri Desika Stotra goshti. The entire Mada Veethi of Triplicane was filled with devotees, goshtis and a power-packed Nadaswaram troupe.

The grandeur of the Utsavam was attributable to the utmost co-operation of Sri Ahobila Mutt, Triplicane, Agent Sri Thiruvelliyangudi Venkatesan and Sri Melma Lakshminarayanan. Our special thanks to Sri V.R. Desikan for his valuable support. We record our sincere thanks to the SVDD Archakas, Kainkaryaparas and Sripatham Association for their wonderful support. The Devasthanam also thanks the donors Sri Parthasarathy, Nanganallur, Sri Gopala Desikan, and Sri N.R. Ramaswamy.

The grand Sathamana Utsavam Celebrations, starting with Theppotsavam in April, Lakshaarchanai in May, ThirukKalyana Utsavam in June and this month's Brundaranya Kshetra Vijayotsavam have given us more energy and confidence to us in order to organise many such events. Already devotees are eagerly asking as to the programme for the forthcoming month.

We are also planning for a series of Upanyasams by eminent scholars, Music concerts, etc., as part of the Sathamana Mahotsavam Celebrations.

The month Aani was thus very eventful and Sri Sudarsana Jayanthi was followed by Sri Sudarsana Mahayajnam which was performed for the benefit of the society at large. As has been the case every year, Archakas from several Divyadesams participated in it. In another highlight of the month, Srimath Azhagiyasingar of Sri Ahobila Mutt performed Mangalaasaasanam on June 18.

Thiruvadi-Pooram festival, the annual Jyeshtabhishekam and the double Utsavam of Gajendra Moksham (Aadi-Garudan) and Aalavandhar Satrumurai are lined up for the month of Aadi.



Lastly, we wish to add that, we have just started the Sathamana Utsavam Celebrations and we have big plans for every month and a grand one-month celebration in April 2024 with all your continued support. And we can assure you that it will be a milestone celebration, one that will be memorable for a long time to come for all of us. ❊

# சோபக்ருத் - வருட ஆடி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை / ஆகஸ்ட் | ஆடி | | | | | |
| 17/07/2023 | 1 | அமாவாசை | திங்கள் | புனர்வஸு | தக்ஷிணாயன புண்யகாலம். காலை பெருமாள் தாயார் மூலவர் உத்ஸவர், ஆண்டாள் உத்ஸவர், ஸ்வாமி தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் திருவாராதனம். பெருமாள் வீதி புறப்பாடு. ஆண்டாள் உத்ஸவம் 5ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ராமஸ்வாமி, ஸ்ரீ S. பார்த்தஸாரதி. அமாவாசை: ஸ்ரீ கோவிந்தன் |
| 18/07/2023 | 2 | ப்ரதமை | செவ்வாய் | புனர்வஸு/ புஷ்யம் | ஆண்டாள் உத்ஸவம் 6ம் நாள். காலை ஆண்டாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 19/07/2023 | 3 | த்விதீயை | புதன் | புஷ்யம்/ ஆயில்யம் | ஆண்டாள் உத்ஸவம் 7ம் நாள். காலை ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |
| 20/07/2023 | 4 | த்ருதீயை | வியாழன் | ஆயில்யம் | ஆண்டாள் உத்ஸவம் 8ம் நாள். காலை ஆண்டாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ வேங்கட நரஸிம்ஹன் குடும்பத்தினர் |
| 21/07/2023 | 5 | த்ருதீயை/ சதுர்த்தி | வெள்ளி | மகம் | ஆண்டாள் உத்ஸவம் 9ம் நாள் காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர், ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை தாயார் கருட வாஹனம் உள் புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திட்டை ஸ்ரீ ராஜகோபால் முரளி |
| 22/07/2023 | 6 | சதுர்த்தி | சனி | பூரம் | திருவாடிப்பூரம் ஆண்டாள் உத்ஸவம் 10ம் நாள். காலை பெருமாள் ஆண்டாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை வீதி புறப்பாடு. இரவு திருக்கல்யாணம். ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை, சேர்த்தி ஸேவை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி |
| 23/07/2023 | 7 | பஞ்சமி | ஞாயிறு | உத்தரம் | ஊர்கோல உத்ஸவம். மாலை பொழுதுடன் திருவாராதனம். பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |
| 24/07/2023 | 8 | ஷஷ்டி | திங்கள் | ஹஸ்தம் | ஜ்யேஷ்டாபிஷேகம். 81 கலச திருமஞ்ஜனம். காலை பெருமாள், தாயார் மூலவர் திருமஞ்ஜனம் | ஸ்ரீ கோபால்ஸ்வாமி ஐயங்கார் பண்ட் |
| 25/07/2023 | 9 | ஸப்தமி | செவ்வாய் | சித்திரை | ஸ்ரீ மதுரகவிகள். | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26/07/2023 | 10 | அஷ்டமி | புதன் | ஸ்வாதி | ஸ்ரீ பெரியாழ்வார் | |
| 27/07/2023 | 11 | நவமி | வியாழன் | விசாகம் | ஸ்ரீ நம்மாழ்வார் | |
| 28/07/2023 | 12 | தசமி | வெள்ளி | அனுஷம் | மாலை தாயார் ஆஸ்தானம் | ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |
| 29/07/2023 | 13 | ஏகாதசி | சனி | கேட்டை | தொண்டரடிப்பொடி ஆழ்வார் | |
| 30/07/2023 | 14 | துவாதசி | ஞாயிறு | மூலம் | திருமால்வடை | |
| 31/07/2023 | 15 | சதுர்தசி | திங்கள் | பூராடம் | ஸ்ரீ ஸேனைநாதன் | |
| 01/08/2023 | 16 | பௌர்ணமி | செவ்வாய் | உத்தராடம் | கஜேந்த்ர மோக்ஷம். ஆளவந்தார் திருநக்ஷத்ரம். மாலை பொழுதுடன் திருவாராதனம். ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை பெருமாள் தங்க கருட வாஹனம், ஆளவந்தார் வீதி புறப்பாடு | கஜேந்த்ர மோக்ஷம்: MKR குடும்பத்தினர் ஆளவந்தார் திருநக்ஷத்ரம்: ஸ்ரீ பத்ரிநாராயணன் |
| 02/08/2023 | 17 | ப்ரதமை | புதன் | ச்ரவணம் | காலை ஸ்வாமி தேசிகன் திருமஞ் ஜனம். மாலை வீதி புறப்பாடு. ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 03/08/2023 | 18 | த்விதீயை | வியாழன் | அவிட்டம் | ஸ்ரீ பூதத்தாழ்வார் | |
| 04/08/2023 | 19 | த்ருதீயை | வெள்ளி | சதயம்/ பூரட்டாதி | மாலை தாயார் கிளி வாஹனம் உள் புறப்பாடு | ஸ்ரீ S.ஸுந்தரம் |
| 05/08/2023 | 20 | சதுர்த்தி | சனி | பூரட்டாதி | திருமால்வடை | |
| 06/08/2023 | 21 | பஞ்சமி | ஞாயிறு | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 07/08/2023 | 22 | ஷஷ்டி | திங்கள் | ரேவதி | திருமால்வடை | |
| 08/08/2023 | 23 | ஸப்தமி | செவ்வாய் | அச்வினி | திருமால்வடை | |
| 09/08/2023 | 24 | அஷ்டமி | புதன் | பரணி | திருமால்வடை | |
| 10/08/2023 | 25 | நவமி | வியாழன் | க்ருத்திகை | ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் | |
| 11/08/2023 | 26 | தசமி | வெள்ளி | ரோஹிணி | மாலை தாயார் தங்க கேடயம் உள் புறப்பாடு | ஸ்ரீ T.R. ஸ்ரீநிவாஸன், C/o. ஸ்ரீதர் |
| 12/08/2023 | 27 | ஏகாதசி | சனி | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 13/08/2023 | 28 | த்வாதசி | ஞாயிறு | திருவாதிரை | ஸ்ரீ ராமானுஜர் | |
| 14/08/2023 | 29 | த்ரயோதசி | திங்கள் | புனர்வஸு | ஸ்ரீ குலசேகர ஆழ்வார் | |
| 15/08/2023 | 30 | சதுர்தசி | செவ்வாய் | புஷ்யம் | திருமால்வடை | |
| 16/08/2023 | 31 | அமாவாசை | புதன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 17/08/2023 | 32 | ப்ரதமை | வியாழன் | மகம் | ஸ்ரீ திருமழிசைப்பிரான் | |

| | | |
|---|---|---|
| **ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்** | **திருவாடிப்பூரம் - ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம்**<br>ஜூலை 22 ( சனி) | **ஜ்யேஷ்டாபிஷேகம்**<br>ஜூலை 24 (திங்கள்) |
| | **ஊர்கோல உத்ஸவம்**<br>ஜூலை 23 (ஞாயிறு) | **கஜேந்த்ர மோக்ஷம் - ஆளவந்தார் திருநக்ஷத்ரம்**<br>ஆகஸ்ட் 1 (செவ்வாய்) |

ஸ்ரீ:

# ஆளவந்தாரடியோம் படியோமினி அல்வழக்கே

ஸ்ரீ உ.வே. கோழியாலம் ரங்கநாதாசார்ய ஸ்வாமி

**(ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)**

*ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்தம் ஸுதுர்க்ரஹம்!*
*ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர: தம் வந்தே யாமுநாஹ்வயம்!!*

**ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணி நா** என்கிறபடியே ச்ரிய: பதியான ஸர்வேச்வரன், இந்த துக்கமயமான ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்துழலும் சேதனர்களைப் பார்த்து, அவர்களிடத்தில் இரக்கம் கொண்டு சாஸ்த்ர ப்ரவர்த்தனம் பண்ணி, அதன் மூலம் நன்மை தீமைகளைத் தெரிவித்து, தீமைகளை விட்டு நன்மைகளையடைய உபாயங்களை அநுஷ்டிக்க வல்லராம்படி சரீரேந்த்ரியாதிகளையும் கொடுத்து, இப்படி பலபடிகளில் பாடுபட்டும் **அவஜாநந்திமாம் மூடா:** என்கிற கணக்கிலே சேதனர்கள் நன்மை பெறுவதைக் காணாமையாலே, இனி நம்மாலாவது ஒன்று இல்லை என்று நினைத்து ஆசார்ய பூமிகா பரிக்ரஹம் பண்ணித்தான் இவர்களைத் திருத்த வேணுமென்று திருவுள்ளம் பற்றி, சஸ்த்ரபாணி யாயிருப்பதை விட்டு. சாஸ்த்ரபாணியாய் வந்து உபதேசாதிமுகமாய் இவர்களைத் திருத்திப் பணி கொள்ளுகிறான்.

இதிலிருந்தும் **தேவமிவ ஆசார்ய மூபாஸீத நம: ஆசார்யேப்ய:, யஸ்யதேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ** முதலிய ப்ரமாணங்களின்படி, பரமபுருஷனிடத்தில் போலே ஆசார்யனிடமும் பக்தி பண்ண வேண்டியதென்பதற்கு மேல், ''ஆசார்யனைக் காட்டிலும் உயர்ந்ததேவதையே கிடையாது. பரமபுருஷனும் ஆசார்யனாக வந்தன்றே ஸம்ஸாரத்தில் அழுந்தி அல்லல் படும் சேதனர்களைக் காப்பாற்றுகிறான்!'' என்று நம் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸாதிப்பதிலிருந்தும், **ஆசார்யதேவோ பவ, ஆசார்யவான் புருஷோ வேத** முதலிய ப்ரமாணப்படி ஆசார்யனே நமக்கு பரமோத்தேச்யம் என்று தேறுகிறது. பிராட்டியும் எம்பெருமானும் கூட **வருணீமஹேச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம் பதி** என்றபடி ஆசார்ய பரம்பரையில் ப்ரத மாசார்யர்களாகவே உத்தேச்யர்களாகிறார்கள் என்பது தெளிவு.

இப்படி பரமோத்தேச்யமான ஆசார்ய பரம்பரையில் முக்யமாக விளங்குபவர்கள் ஸ்ரீமத்நாதமுனிகளும் ஸ்ரீமத்யாமுனமுனிவரும், ஸ்ரீமத்ராமா நுஜமுனி வருமேயாவர். உபதேசம் அனுஷ்டானம் முதலியதுகளால் மட்டு மல்லாமல் ஸச்சாஸ்த்ரக்ரந்த நிர்மாணங்களாலுமன்றோ இவர்கள் உலகத்திற்கு மிகவும் உபகரித்தவர்கள். இம் மூவருக்குள்ளும் ஒரு நாயகரத்னமாக விளங்குபவர் ஸ்ரீயாமுன முனிவரேயாவர். பழமையான நம் தர்சநத்திற்கு முதல் ப்ரவர்த்தகர் ஸ்ரீமந்நாதமுனிவராவர். இவர் அருளிய க்ரந்தம் **நியாய தத்வம்** என்பதாகும். இது கொண்டே நம் தர்நசம் **நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்** எனப்படுகிறது. ஸ்ரீயாமுனமுனிவரால் இந்த தர்சநம் பல கர்ந்தங்கள் அருளிச் செய்வதன் மூலம் மிகவும் வளர்க்கப்பட்டது.

நம் தர்சநத்துக்கு மிகவும் உபயுக்தமாய் **பஞ்ச ராத்ரஸ்ய க்ருத்ஸ்தஸ்யத்தா நாராயண: ஸ்வயம், ப்ரவக்தா சந்தஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்ய ய: ஸ்வயம்** என்று புகழப்பட்டதுமான பாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை ஸ்தாபித்த பெருமையும், ச்ரிய: பதியான பரம புருஷனே பரதத்வமென்று நிர்ணயித்த பெருமையும், ஸ்ரீகீதையின் உண்மையான பொருளை விஸ்தாரமாக எடுத்துக்காட்டும் ஸ்ரீகீதாபாஷ்யத்திற்கு வழி வகுத்துக் கொடுக்கும் வகையில் கீதார்த்தத்தைச் சுருக்கமாக எடுத்துக் காட்டிய பெருமையும் இதர மத நிரஸநபூர்வகமாக நம் தர்சநத்தை விசேஷமாக ஸ்தாபிப்பதற்காக அவதரித்த ஸ்ரீபாஷ்யத்திலே அப்படியப்படியே வாக்யங்களையும் ச்லோகங்களையும் எடுத்து உதாஹரித்திருக்கும் படியான ஏற்றமுடைய **ஸித்தி த்ரயத்தை** இயற்றிய மஹிமையும் இதற்கெல்லாம் மேலாக திவ்ய தம்பதிகளின் விஷயமாக கேட்போர் மனம் உருகும்படியான வகையில் அநந்ய ஸாமாந்யமான, தனக்கே உரியதான ஒரு நடையில் ஸர்வ வேதாந்தத்தைப் பொதிந்து இருக்கும் இரண்டு ஸ்தோத்ரங்களை அருளிய பெருமையும் இவர்க்கேயன்றோ சேர்ந்துள்ளது. **ஆளவந்தார்** என்ற திருநாமம் அந்வர்த்தமாக இவரிடம் பொருந்தியுள்ள தென்பதை எல்லோரும் காணும் வகையில் இவரிடம் மற்றவரின் மதங்களை நிரஸிக்கும் திறமையும் அமைந்துள்ளது:

இத்தகைய பெருமைகளைப் பெற்றுள்ள இவ்வாசார்ய ச்ரேஷ்டரின் திருவடித் தாமரைகளை ஆச்ரயித்து இவருடைய தாஸன் என்று சொல்லிக் கொள்ளும் பாக்யம் பெற்றுள்ளவர்களான நமக்கு, தத்வஹித புருஷார்த்தங்களை விபரீதமாகக்காட்டும், அஸச்சாஸ்த்ரங்களைப் படிக்கும், ஏன் கண்ணெடுத்துப் பார்க்கும் துர்தசை ஏற்படவே மாட்டாது.

இத்தகைய பெருமையுள்ள ஆசார்யர்களுடையவும், இவர்களால் தத்வஹித புருஷார்த்தமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள திவ்யதம்பதிகளுடையவும் அர்ச்சா மூர்த்திகளை நாம் ஸேவிக்கும் வகையில் இவர்கள் எழுந்தருளியிருக்கும் கோயில்களை (ஆலயங்களை) ஜீர்ணோத்தாரணம் பண்ணும் கைங்கர்யம் உலகுக்கு மஹோபகாரகமானது என்றால் அது மிகையாகாது என்று ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே என்றபடி உறுதியாகக் கூறுவோம்!

ஸ்ரீ:

# சிற்றிலும் சிற்றஞ் சிறுகாலையும்

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

**கோதை விளையாடுகிறாள்**

அன்றொருநாள் ஆயர் சிறுமியருடன் ஆண்டாள் ஆனந்தமாக விளையாடுகிறாள். ஆற்றுமணலை அள்ளிக்குவித்து அழகிய சிற்றில்கட்டி மகிழ்ந்திருக்கும் அவ்வேளையில் தீமை செய்யும் சிரீதரன் வந்து அச்சிற்றிலை சிறிதும் இரக்கமின்றி உதைத்துச் சிதைக்கிறான்! சிரிக்கிறான்! சிறுமியரின் நயனங்களில் நீர் வெள்ளம்! இவன் வதனத்திலோ நகைவெள்ளம்! இது அன்றாடம் வாடிக்கையாகிவிட்டதே! இதற்கென்செய்வது? ஓர் எண்ணமும் உதித்தது! நாளை ஒரு வழி செய்வோம். வளைக்கைகளால் சிரமப்பட்டு தெள்ளியெடுத்த வண்டல் நுண்மணலை அவரவர் கோலச் சிற்றாடையில் அள்ளிச் சென்று ஆங்கோர் ஆய்ச்சி இல்லத்து அழகிய முற்றத்திலே குவித்து வெள்வரைப்பதன் முன்னமே சிற்றில்கட்டி விளையாடுவோம்! தருமமறியா அக்குறும்பன் அறியாவண்ணம் தந்திரமாகத் திட்டமிட்டனர்!

அங்ஙனமே அடுத்தநாளும் கோழியழைப்பதன் முன்னமே தோழிகளெல்லாரும் கூடி மணலையும் மடியில் கட்டிக்கொண்டு முற்றம் வந்தடைந்தனர்! காற்றும் புகாவண்ணம் கதவடைத்துக்கொண்டு சிற்றிலும் கட்டியாயிற்று. முடிக்கும் வேளையில் அடடா! ஈதென்ன, அந்தோ! சத்தமின்றி வந்து நிற்கிறான் அம்மாயக்கள்வன்! முற்றத்தூடு புகுந்து முகம் காட்டிப் புன்முறுவலும் செய்கின்றானே! சுற்றமும் அறியாதே யாம் வந்த இம்முற்றத்துக்கு நீ எவ்வாறு வந்தாய்? கள்ள மாதவா! கேசவா! உன்பேச்சும் செய்கையும் இப்பேதைகளால் அறியலாகுமோ? சிறுமிகள் நீர்மல்கும் கண்களில் சிறு சீற்றத்தையும் ஏற்றிக்கொண்டு அவனை ஏறிட்டுப்பார்க்க, பால்வடியும் அத்திருமுகம் கண்டதும் பொங்கும் பாலின்மேல் நீர் தெளித்தாற்போல் அச்சீற்றமும் அடங்கிப்போனதுதான் என்னே! சீறிவருவோரையும் வாரி அணைக்கும்படி செய்வது இவன் செய்யும் செப்படிவித்தை! இப்படித்தானே தன் தாய் யசோதையையும் பழக்கிவைத்துள்ளான்! சிறுமியரின் சீற்றத்தை சிரிப்பாக மற்றிவிட்டான் மாமாயன்!

**கோதை சிந்திக்கிறாள்**

மையலேற்றி மயக்கவல்ல உன் முகம் மாயமந்திரம்தான் கொலோ! முகம்கண்டு மயங்கிய கோதையும் தெளிவடைந்து சிந்திக்கிறாள், கரந்தெங்கும் பரந்துள்ள இவனறியாமல் காரியம்தான் ஏதும் நடக்குமோ! என்ன பேதைமை! கண்ணனறியாமல் காற்றும் அசையாது என்றிருக்க, இவன் அறியாமல் இதுசெய்வோம் என்ற துணிவு மதியீனமன்றோ! நின் முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட என்று அன்று தம் தோழிகளை அழைத்த இவள் இன்று அதே முற்றத்தில் அதே தோழிகளுடன் தாம் இருக்க, தாமாகவே வந்து நிற்கும் இவனைக்கண்டு கலங்குவானேன்? மண்மடந்தை இவள்! செய்த காரியமோ! மணற்கொள்ளை! மாயனிடம் பிடிபட்டாள்!

சிந்தனை விரிகிறது! இம்மண் யாருடையது? நம் பராங்குச நாயகியும் வாமனன் மண்ணிது என்றல்லவோ அன்றே சொன்னாள்! அவனறியாமல் மணலை அள்ளிவந்தது மணற்கொள்ளைதானே? கொள்வன் நான் என்று மாவலியிடம் மூவடி மண் கேட்டுப்பெற்ற இவன் இப்பூமிப்பரப்பு முழுவதும் தனதென்று தாளால் அளந்து காட்டினான்! தாரை வார்த்த நீர் தரையைத்தொடு முன்பே ஓங்கி உயர்ந்தான்! உலகளந்தான்! இம்மண்ணும் விண்ணும் அனைத்தும் தன் திருவடிகளுக்கு உட்பட்டது என்றல்லவோ அளந்து காட்டினான்! எனவேதான் அவனிடம் மயங்கிய மணிவல்லியும் (பராங்குச நாயகி) மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிது என்றாள். பித்தத்தால் பீடிக்கப்பட்டவன் சந்தனக் குழம்பிலிருந்து கையை எடுக்கமாட்டானாம்! அதுபோல் அவனைப் பிரிந்து நோவுபட்ட இவளும் விரகதாபத்தின் சூட்டினைத் தணிக்கும் சந்தனக் குழம்பெனக் கருதி இவ்வாமனனின் மண்ணினைத் துழாவினாள் போலும்! அது சரி, யார் அந்த வாமனன்? நம் கோவிந்தனேயன்றோ! முற்ற மண்ணிடந்தாவி விண்ணுற நீண்டளந்துகொண்டாய், சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்கடவையோ கோவிந்தா! என்று மேலே பாசுரம் படைத்து நம்மையும் சிந்திக்கச் செய்கிறாள்.

**இனி நாம் சிந்திப்போம்**

அத்யாபயந்தி என்னும்படி ஞானம் புகட்டவந்தவள் இப்பிராட்டி! கடலுக்கடியில் பாசிதூர்த்துக் கிடந்த தம்மை மீட்டுவந்த ஞானப்பிரானிடம் தாம் கேட்டுப் பெற்ற உய்யும் உபாயத்தினை உலகோருக்கு உணர்த்த வந்தவள் இவள்! வேதத்தை வித்தாக்கி விளைவித்த தம் ப்ரபந்தங்களில் அவ்வேதங்களின் ஸாரத்தையே தந்த இப்பிராட்டி அவற்றுள் பேசியிருப்பனகள் அனைத்தும் நாம் பெற்ற பேறேயன்றோ! சிறுக்குட்டனாய் வந்த இப்பெரிய பெருமாளிடம் இவள் சிற்றில் சிதையேல் என்று எதைப் ப்ரார்த்திக்கிறாள்? சிந்திக்கவேண்டியது! சிந்திப்போம்!

இவள் கூறும் சிற்றிலாவது என்ன? இல் என்பது இல்லம், வீடு. சிற்றில் என்பது சிறுவீடு எனில் பெருவீடு என்று ஒன்று உண்டு என்பதும் தெளிவாகிறது. பகவானிடத்

தில் சிற்றில் சிதையேல் என்பது இவள் ப்ரார்த்தனை. இதன் பொருளை ஆராய்வோம்.

ஆத்மா குடியிருக்கும் சிறுவீடு என்பது நம் சரீரம். இதிலிருந்து விடுபட்டு ஆத்மா செல்லவேண்டியது பெரு வீடாகிய மோக்ஷம்! பூமி முதலாகிய பஞ்சபூதங்களையும் உள்ளடக்கி உருவான இந்த சரீரத்தையே மணல்வீடு என்கிறாள். இம்மணல் வீடு மனிதற்கே அர்ப்பணமாகில் இதன் உள்ளிருக்கும் ஆத்மா மீண்டும் இம்மண்ணிலேயே வந்து பிறக்கும்! மாறாக, ஆத்மா குடியிருக்கும் இச்சிற்றில் எம்பெருமானுக்கு அர்ப்பணமாகில் அந்தமில் பேரின்பமாகிய பெருவீட்டினைப் பெறமுடியும். சிற்றிலில் பெறும் சிற்றின்பத்தை மட்டுமே கருதாமல் இவ்வாத்மா பேரின்பத்திற்கு வழிகாண வேண்டும்! அவ்வழியினைக் காட்டவந்தவளே இப்பிராட்டி!. எனவேதான் மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய்! என்று மன்மதனை விளித்துச் சொன்னாள்.

தேச முன்னளந்தவன் திரிவிக்கிரமன் திருக்கைகளால் என்னைத் தீண்டும் இப்பேறு எனக்கருள் என்றும் அவனை வேண்டினாள். எனவேதான் வாமனன் மண்ணைக்கொண்டு இச்சிற்றிலைக் கட்டி அப்பெருமானுக்கும் உணர்த்தினாளோ!

**விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும்** என்கிறது விஷ்ணு தர்மம். 'ஆத்மா மட்டுமின்றி அதன் இல்லமான சரீரமும் எம்பெருமானின் கைங்கர்யத்திற்காகவே' என்கிறது இந்த ச்லோகம்! **மஹதா புண்ய பண்யேன** என்னும்படி பெருப்பெருத்த புண்யங்களையெல்லாம் விலையாகக்கொடுத்து அரிதாய் பெற்றுவந்த இம்மனித உடல் புலனடக்கமற்று ஆத்மாவையும் தன் வழியே இழுத்துப்போய் பிறந்ததன் பயனையே பெறவிடாமல் செய்துவிடும். மாறாக, இந்த சரீரம் பகவானுக்கே அர்ப்பணமாகில் தூய நற்பதவி எய்தி உள்ளிருக்கும் ஆத்மாவிற்கு உயர்பதவி அளிக்கும் என்பது இவள் கருத்து. எனவேதான் எம்பெருமானிடம் ''எங்களை உன் பொருளாக நீ ஏற்றுக்கொள் . அப்போதுதான் எங்கள் சிறுவீடு களாகிய சரீரங்கள் சிதைந்து மண்ணாகாமல் நல்வாழ்வு பெறும்'' என வேண்டுகிறாள். சிற்றில் என்பது இடவாகு பெயரால் அதில் வாழும் ஆத்மாவையும் குறிக்கும். உடலால் செய்யும் செயல்களே உயிரின் மேன்மைக்குக் காரணமாகும். எனவேதான் இவ்வுடலும் உயிரும் சிதைந்து போகாமல் உயர்ந்த பதவியைப் பெறும்வண்ணம் நீ அருளவேண்டுமென வேண்டுகிறாள்.

ஓஜஸ் என்பது உடல் பலத்தைக் குறிக்கும். தேஜஸ் என்பது ஆத்ம பலத்தால் வளரும் ஒளி. இவ்விரண்டும் மனித உடலுக்கு இன்றியமையாதது. ப்ரபந்நன் இந்த உடல் உள்ளவரை இதை சாஸ்த்ரோக்தமான முறையில் காக்கவேண்டும், இதன் ஓஜஸும் தேஜஸும் ஈச்வரனுக்கு நிவேதனமாக வேண்டும் என்கிறது சாஸ்த்ரம்.

வையத்தே வாழும் வாழ்வு வானேறப் போமளவும் வழிகாட்டவேண்டும். இவ்விதம் வானேற வழிதேடும் நல்வாழ்விற்கு இளம் வயதிலேயே வித்தும் இடவேண்டும். இதைத்தான் ஆண்டாளும் சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன் பொற்றாமரையடியே போற்றினோம் என்று பாடினாள். சிற்றஞ்சிறுகாலை என்பது மனித வாழ்வின் குழந்தைப் பருவம். இதை அவரைப்பிராயம் என்றும் சொன்னாள்! இப்பருவத்திலேயே உடலும் உள்ளமும் சீரான வழியில் செல்லவேண்டுமென்பது இவள் விடுக்கும் செய்தி. நல்லது தீயதென உலக விஷயங்களைப் பகுத்தறியவியலாத சின்னஞ் சிறு வயதிலேயே அறிவும் மனமும் பகவத்பக்தியில் திடப்பட வேண்டும் என்கிறாள்! ஆய்ப்பாடியில் சிறுமிகளையே அழைத்துச் சொல்வதுடன் அவர்களுக்கு அழியாத செல்வமும் இதுவே என்றும் காட்டவே செல்வச்சிறுமீர்காள் என்று விளிக்கிறாள்! இங்ஙனம் சிற்றிலும் அதில் வாழும் ஜீவனும் சீருடன் திகழ வேண்டுமெனில் அதற்குத்தேவை அவனருளன்றோ! அதையே ஆண்டாள் தம் ஈரச்சொற்களைக் கொண்டு அவனிடமே வேண்டுகிறாள்!

**மணிவல்லியின் மாற்றம்**

சிற்றிலும் சீவனும் சீருடன் வாழ அருள வேண்டியிருக்க அவ்வெம்பெருமான் அதைச் சிதைப்பானேன் என்றொரு கேள்வி இங்கு எழ, இதற்கு மணிவல்லியாய் நின்ற மாறன் அருளிய மாற்றமும் நிபதில்நீ ஒன்றுண்டு! (6-2-9) சிற்றில் கட்டி சிறுசோறு சமைத்து நாங்கள் விளையாடியபோது (சிறு பிராயத்திலேயே) **உகவையால் நெஞ்சம் உள்ளுருகி உன் தாமரைத் தடங்கண் விழிகள்** என்னும் இனியவலையில் நாங்கள் அகப்படுகைக்காக உன் சிறு திருவடியால் எங்கள் சிற்றிலையும் சிறு சோற்றையும் அழித்தாய் எனப்பாடுகிறாள்! இதுவே மாயனின் மாயை! விண்ணையும் மண்ணையும் அகப்படுத்திக்கொண்ட கண்ணனின் அச்சிறு திருவடிகள் நம்மையும் அகப்படுத்திக்கொள்ளட்டும்!!

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# திருவேங்கடமுடையான் புரியும் போர்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஜகத்ப்ரபுவும் தேவாதிதேவனுமான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆஸுரப்ரக்ருதிகள் தன் அடியார்களைத் துன்பம் செய்யும்பொழுதும், தர்மம் வீழும்போதும் மத்ஸ்ய-கூர்ம-வராஹாதிகளாய் முதலில் அவதரித்து, துஷ்ட நிக்ரஹம், ஸாதுரக்ஷணம் மற்றும் தர்மஸ்தாபனம் செய்தருளினான். பின் அவனே **மாறில் போர் அரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்** என்று கொண்டாடும்படியாக சக்ரவர்த்தித்திருமகனாய் ஓர் வானரக்கூட்டத்தின் துணையுடன் ஸர்வ வல்லமை படைத்த இராவணனையும் அவனது அரக்கர் கூட்டத்தையும் கொன்று தீர்த்தான். கோவலர் குட்டனாய் பூதநா, சகடாஸுர, சிசுபால கம்ஸாதிகளை ஒழித்து தன் ஸர்வரக்ஷகத்வத்தையும், ஸர்வலோக சரண்யத்வத்தையும் ஸ்தாபித்தான். ஸர்வஸ்வாமியான எம்பெருமான் சாஸ்த்ரங்களைக் கொடுத்தும் ஆங்காங்கே அர்ச்சாரூபமாய் எழுந்தருளியும் அவன் ஸம்பத்தான சேதன-அசேதனங்கள் அனைத்தையும் இன்றளவும் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான். ரக்ஷ்ய வஸ்துவை எதிரிகளிடமிருந்து ரக்ஷிப்பது ரக்ஷகனான அவனது கர்த்தவ்யமன்றோ!

ஸ்வாமி தேசிகன், அகிலாண்ட கோடி ப்ரஹ்மாண்ட நாயகனான திருவேங்கடமுடையானும் நம்மை ரக்ஷித்து, மோக்ஷ பர்யந்தமான பலனை அளிக்க ஒரு மாபெரும் போர் புரிகின்றான், என்று ஸாதிக்கிறார். யாரிடத்தில்? அப்படி என்ன யுத்தம்?

*கருணே துரிதேஷு மாமகேஷு ப்ரதிகாராந்தரதுர்ஜயேஷு கிம்ந:|*
*கவசாயிதயா த்வயைவ சார்ங்கீ விஜயஸ்தாநமுபாஷ்ரிதோ வ்ருஷாத்ரிம்||*

(தயா சதகம் - 28)

‘‘ச்ரிய:பதியின் திருவுள்ளம் இப்பூவுலகில் உள்ள சேதனர்கள் அனைவரையும் இந்த ஸம்ஸாரமென்னும் பெரும்பாழிலிருந்து மீட்டு தன்னிடம் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்பது. அது எப்பொழுது ஸித்திக்குமெனில் ஈஸ்வரன் அவர்களின் பாபங்கள் அனைத்தையும் ஒழித்த பின்பே. எம்பெருமான் கட்டளையிடுகிறான். **என்னைச் சரணடைவாயாக! (மாம் ஏகம் சரணம் வ்ரஜ!)** என்று. அப்படி சரணடையும் பொருட்டு நான் உன்னுடைய எல்லா பாபங்களிலிருந்தும் உன்னை விடுவித்து மோக்ஷத்தை அளிக்கின்றேன் **(அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி)** என்று. ஆனால் சேதனர்களிடமோ ‘‘நான் பரதந்த்ரனுமல்லேன், தேவரீருக்கு உரியேனுமல்லேன்’’ என்ற எண்ணம் அல்லவோ ஏறிட்டுக் கொண்டிருக்கிறது. இதுதானே



எம்பெருமானின் கட்டளையை மீறி அவர்கள் செய்யும் பகவத்-பாகவத அபசாரங்களுக்குக் காரணமாகவும் உள்ளது. அந்த பாபங்கள் எப்படியிருக்கின்றன?

இராவண வதத்தின் பொழுது இராமன் அவனது தலையைக் கிள்ளக்கிள்ள இன்னொன்று முளைத்துக் கொண்டேயிருந்தது போல, அலை அலையாய், ஆதியும் அந்தமும் இல்லாத ஓர் ப்ரவாஹமாய் பாபங்கள் இருக்கின்றன. நம்மை மீட்டு ரக்ஷிக்க வேண்டுமென்று துடிக்கும் எம்பெருமானை இந்த பாபங்கள் அஸ்த்ரங்கள் போல தாக்குகின்றன. போரில் அஸ்த்ரத்தை மீண்டும் மீண்டும் பிரயோகம் பண்ணுபவனுக்குத்தானே ஜயம் உண்டாகும். அதுபோல நம் மீண்டும் மீண்டும் பாபங்கள் செய்வதனால் அவை ஓர் பாபாஸ்த்ர பரம்பரையாக மாறி எம்பெருமானை அம்புபோலத் தாக்கி வதைக்கின்றன. இவர்களை ரக்ஷித்து மீட்கமுடியாமல் இந்தப் போர் தொடர்ந்து கொண்டேயிருப்பது அவனுக்கு மிகுந்த வேதனையை உண்டாக்குகிறது.

இவன் ஸர்வஜ்ஞன் மற்றும் ஸர்வசக்தனாக இருந்தாலும், சாஸ்த்ரங்களைத் தானே வெளியிட்டும், பின் ஆழ்வார்கள், ஆசார்யர்கள் மூலமாக நல்லுபதேசங்களைப் பண்ணிவைத்தாலும் அபராத சக்ரவர்த்திகளான இவர்கள் செய்யும் பாபங்களை அளவிட்டுப் பார்த்தால் எக்காலத்திலும் இவர்களுக்கு மோக்ஷ ப்ரஸக்தி என்பது ஒன்றில்லாமலே போகும். பஞ்சாயுதங்களை தரித்துக் கொண்டிருந்தாலும் சேதனர்களின் பாப விஷயத்தில் அவை எதுவும் உபயோகமில்லாமல் போகின்றனவே, என்று எம்பெருமானுக்கு ஒரு சோர்வு ஏற்படுகிறது.

வேறு எந்த விதத்திலும் போக்க முடியாமல் இருக்கும் இவர்கள் பாபங்களை ஒழிக்க ஒரு உபகாரம் பண்ணுகிறாள் தயாதேவி. அது என்னவென்னில் ஸ்ரீநிவாஸனின் திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு ஒரு கவசமாக மாறுவது. தன் திருக்கையில் சார்ங்க வில்லை எடுத்துக்கொண்டும், கருணையாகிய தயாதேவியை ஓர் கவசமாகப் பூண்டும் சேதனர்களின் பாபங்களுடன் போர் புரிகின்றான் பெருமான். அவர்கள் பாபாஸ்த்ரங்கள் ''தயை'' என்னும் கவசத்தில்பட்டு செயலிழந்து போகின்றன. இவர்களின் பாபங்களை ஒழித்து வெற்றி பெறப் பாங்கான ஓர் இடம் தேடினான் பெருமான். திருவேங்கடமலையே ஏற்றதெனக் கண்டான் **(கடம்-வேம்).** அந்த மலையைப் பார்த்ததுமே மோக்ஷ விரோதியாய் இருக்கும் இவர்கள் பாபங்கள் ஒழிந்துப்போமெனத் துணிந்தான். அம் மலையிலேயே தன் திவ்யமங்கள விக்ரஹத்தின் அழகையும் தன் திருக்கல்யாண குணங்களையும் காட்டிக்கொண்டு தயாதேவியுடன் நித்யவாஸம் செய்கின்றான். இவ்வாறு தயாதேவி அவனது நெஞ்சில் ஒரு கவசமாய் நின்று, ஒரே ஸமயத்தில் சேதனர்களின் பாபங்களைச் செயலிழக்கச் செய்தும் (அவனது நெஞ்சில் சேதனர்களின் பாபங்கள் இடம் பெறாமல் செய்தல்), இம்மாபெரும் போரில் எம்பெருமானை வெற்றிபெற வைத்து அதன் மூலமாக அவனுக்கு வைஷம்யம் மற்றும் துக்கம் என்னும் தோஷங்களை அண்டவிடாமல் செய்தும் பேருதவி செய்கிறாள்'' என்று நம் பாபங்களின் வீர்யத்தையும், அதைத் தணித்து எம்பெருமானுக்கு நம்மிடத்தில் ஒரு அநுக்ரஹ விஷேஷம் ஏற்பட தயாதேவி செய்யும் பேருபகாரத்தையும் கவிநயத்துடன் கூறுகிறார் நம் கவிஸிம்ஹம்.

ஒருவன் தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் ''கோவிந்த!'' கோஷம் விண்ணைப்பிளக்கும் திருவேங்கடமலையில் நித்யவாஸம் பண்ணும் ஸ்ரீநிவாஸனை ஸேவித்தால் அவன் பாபம் ஒரு துளி கூட மீதமில்லாமல் வெந்துபோகும். அங்கே வீற்றிருக்கும் பிரானானவன் தயாதேவியையன்றோ கவசமாகப் பூண்டுள்ளான்!

---

## திருமயிலையப்பனின் திருவல்லிக்கேணித் திருவிழா

மாடமாமயிலையில் குடி கொண்டிருக்கும் ஸ்ரீ அலர்மேல் மங்கா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் உபயநாச்சிமாருடன் திருவல்லிக்கேணி எழுந்தருளி பாகவதோத்தமர்களை கடாக்ஷித்த கண்ணுக்கினிய காக்ஷியை 08.07.2023 அன்று காணும் பாக்யம் பெற்றேன்.

திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீமத் ஆதிவண்சடகோபனும் ஸேவித்தபடி முன் செல்ல, பெருமாளின் கம்பீரமான மாடவீதி புறப்பாடு கோலாஹலமாகத் தொடங்கியது. அத்யாபக கோஷ்டி, வேத பாராயண கோஷ்டி, ஸ்ரீ தேசிக ஸ்தோத்ர கோஷ்டி இவை எழுப்பிய கோஷம், விஷேச தவில்களுடன் நாதஸ்வர விற்பன்னர்கள், பேண்ட் வாத்தியங்களின் கீத ஒலி மற்றும் வாண வேடிக்கை ஏற்படுத்திய உற்சாக ஒலியுடன் சேர்ந்த பக்த கோஷ்டியின் ஆரவார ஒலி ஆகியவை சேர்ந்து அருகில் இருந்த கடல் அலை ஓசையை விடப்பெரிதாக இருந்தது.

அடியேன் கூட்டத்தில் வந்த போது பக்தர்களிடையே எழுந்த சில ஸம்பாஷணைகள்:

- ரொம்ப மகிழ்ச்சியா இருக்குங்க, இப்படித்தான் நம் பாரம்பரியத்தை முன் நிறுத்த வேண்டும்.
- 50 வருஷமாக இந்தத் தேரடி அருகில் இருக்கேன். இன்று போல் என்றும் இவ்வளவு உற்சாகமாக உணர்ந்தது கிடையாது.
- மயிலையில் இந்த பெருமானுக்கு பக்தர்களிடையே கிடைக்கும் வரவேற்பை இந்த ஊர் (திருவல்லிக்கேணி) பக்தர்கள் தரும் வரவேற்பு விஞ்சி விட்டதே (ஒரு மயிலை வாஸி).
- ஸார் இந்த உத்ஸவம் மாதா மாதமா? அடுத்து எப்போ வருவார் ஸார்?

இந்த ஸம்பாஷணைகளைக் கேட்கும் போது நம் திருமயிலையப்பனின் ஆகர்ஷண சக்தியைப் பற்றின வியப்பு மேலோங்கியது. ஒரு தடவை தர்சனம் தந்து விட்டால் அவ்வளவு தான்! மனதை விட்டு அகல மாட்டான் அல்லவா!

தெற்கே மடிப்பாக்கம் விஜயம் ஆயிற்று; வடக்கே மாடமாமயிலை திருவல்லிக்கேணி விஜயம் ஆயிற்று; ''மேற்கே மாமலையான நீர்மலை விஜயம் எப்போது?'' என்று பக்தர்கள் உத்ஸாஹக் குரல் எழுப்புகிறார்கள்.

அவன் திருவுள்ளப்படி இந்த உத்ஸவத்தை சிறப்பாகக் கட்டமைத்த தர்மகர்த்தாக்களுக்கும் அதை மெச்சும்படி நடத்திக்காட்டிய ஆலய மற்றும் அஹோபிலமடம் நிர்வாகிகளுக்கும், அர்ச்சக ஸ்வாமிகளுக்கும், மடைப்பள்ளி வித்தகர்களுக்கும், அத்யாபக, வேதபாராயண ஸ்வாமிகளுக்கும், குறிப்பாக ஸ்ரீ பாதம் தாங்கிகளுக்கும் பல்லாண்டு.

**நந்தகுமார் (எ) ராமானுஜன்**
**மடிப்பாக்கம்**







## கோடை உத்ஸவம்



ஸ்ரீ:







**கோடை உத்ஸவம்**








## கோடை உத்ஸவம்











ஸ்ரீ:





**ஆனி கருடன் - பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்**







ஆனி கருடன் - பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:









ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்



ஸ்ரீ:

கண்ணுக்கினியன









ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்









ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்









## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்











ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்






ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்







ஸ்ரீ:







## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்









ஸ்ரீ:





## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்







ஸுதர்சன ஹோமம்














## ஸுதர்சன ஹோமம்















## ஸ்ரீமத் அழகியசிங்கர் மங்களாசாஸனம்



ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் (12)

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

சென்ற திருமொழியில் நாள்முழுதும் விளையாடிய புழுதியோடு கண்ணன் ஒரு திருவோணத்தன்று பள்ளிகொள்ளச் செல்ல, யசோதை அவனைத் தடுத்து நீராட்டமமைத்து, பலவகையான பணியாரங்களையும், கனிகளையும் கொடுக்க விரும்புவதை, அவளது சொற்களாக அமைத்துப் பெரியாழ்வார் பாடுவதை அனுபவித்தோம்.

இவ்விதழில் நீராட்டம் கண்டபின் கண்ணனுக்குக் குழல் வாரிய பொழுது யசோதை சொன்னதையெல்லாம் இந்தத் திருமொழியில் பெரியாழ்வார் அனுபவிப் பதைப் பார்க்கலாம். இந்த திருமொழியும், இதற்கு அடுத்து வரும் திருமொழியும் கண்ணன் தன் தலையை அங்குமிங்கும் திருப்பாமல் ஓரிடமே பார்ப்பதற்காக ஒரு காக்கையை யசோதை கூப்பிடுவதாகப் பெரியாழ்வார் பாசுரங்களை அமைத்துள்ளார். இவை இப்போதிருக்கும் பிள்ளைத்தமிழ் இலக்கணத்தில் பருவங்களாகப் பாடப்படுவதில்லை.

காக்கை வந்தா கண்ணனின் குழலை வாரப்போகிறது? இல்லவேயில்லை! உண்மையில் யசோதை காக்கையைக் குழல் வாரக் கூப்பிடவில்லை. அக்காக்கை என்று யசோதை அழைப்பது தூரத்திலுள்ள காக்காய் தூரத்தில் மறைவில் இருக்கிறாயே? இப்படி எங்கள் அருகே எதிரில் வா என்று அழைப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும். காக்கை கண்ணனின் எதிரில் இருந்தால் கண்ணன் காக்கையைப் பார்த்துக்கொண்டு ஒரு பக்கமாக இருக்க அவன் தலை அசங்காமல் இருக்கும்; வாரிப் படியவைத்துக் கொண்டையிட வசதியாக இருக்கும் என்பதால் அழைக்கிறாள். இவள் ஏன் கூந்தலை வார வேண்டும்? என்றால், கண்ணன் இப்பொழுதுதான் மஞ்சனம் ஆடி இருக்கிறான். அவன் கூந்தல் கலைந்தும் நெரித்துக் கொண்டும் இருப்பதால் அதனை திருத்தும் முகமாக குழல் வாருவதாக ஒவ்வொரு பாடலும் அமைந்துள்ளது.

மேலும் இதில் ஒவ்வொரு பாசுரமும் ஒவ்வொரு காரணத்தையிட்டு யசோதை காக்கையை அழைப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. முதல் பாசுரத்தில் இவன் பின்னைமணாளனாய்



அவளோடு சேர்ந்து திருப்பேர் நகரில் பள்ளிகொண்டதால் அவனது திருக்குழல்கள் மிகவும் கலைந்து இருப்பதைக் கண்டு, காக்கையை குழல் வார யசோதை அழைக்கிறாள். ஓ காக்கையே! நீ நப்பின்னைக்கு வல்லபனும், திருப்பேர் நகரில் அர்ச்சையாய்ப் பள்ளிகொண்டு இருப்பவனும், முன்னமே இருக்கின்ற அனாதியான தேவர்கள் மற்றும் நித்யஸூரிகளுக்கு முதலாய்த் தனிக்காரணம் ஆனவனும், தாயாரான என்னையும், நப்பின்னை, தேவகி என்றாற் போல் உள்ள எங்கள் குலத்திலேயே முக்காலத்திலும் உள்ளவரோடு சேர்த்து அடிமையாய் ஸ்வீகரித்து அருளின ஸ்வாமியுமான கண்ணனைக் கிட்டிவந்து கூந்தலை வாருவாயாக! காக்கையே இந்த ச்ரிய: பதியினுடைய கூந்தலை வாருவாயாக! என்று யசோதை அழைப்பதாகப் பெரியாழ்வார். அழைக்கிறார்.

**யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:** என்று புருஷ ஸூக்தம் சொல்வது போல முன்னமே உள்ள தேவர்கள் நித்யஸூரிகள். இவர்களை நோக்கியும் இவன் முன்னை வித்து – அதாவது தனிக் காரணன்! இவர்களுக்குக் காரணம் பிரமன் அல்ல. நித்யஸூரிகள் அனாதி ஆதலால் அனாதியான இவனே

அந்த நித்யஸூரிகளுக்குக் காரணமாகிறான். இவன் தனிக்காரணன் என்றது தனக்கு ஒரு காரணமும் இன்றியே, தான் அனைவருக்கும், அனைத்துக்கும் நிமித்தம், உபாதாநம், ஸஹகாரி என்று ஸர்வவித காரணமும் என்பதையும் ஆழ்வார் காட்டுகிறார். இவ்வளவு பரத்வமுள்ளவன் நீசரான எங்களுக்கும் ஸுலபனாய் இருக்கிறாயே என்று கொண்டாடுகிறார். மாதவன் தன் குழல்வாராய் என்பதற்கு, இவ்வளவு ஸுலபனாய் இருக்கிறானே என்று களித்துக் கூடின பெரியபிராட்டியாரோடும் கூடின புணர்ப்பும் கூந்தல் கலைந்ததற்குக் காரணம் என்று ரஸமாக நம் பூர்வாசார்யர்கள் அனுபவிப்பர்.

இரண்டாவது பாசுரத்தில் முதல் பாசுரம் போலன்றி, இந்த அவதாரத்தில் கண்ணன் செய்ததையே சொல்லிக் காக்கையைக் குழல் வார அழைக்கிறார். முதன்முதலில் பூதனை என்னும் பேய்ச்சியின் முலையைப் புசித்தப் பச்சைக் குழந்தையாகவும், கள்ளத்தனமான சகடாஸுரனையும் மருத மரங்களையும் முறித்தவனாயும், காயாம்பூ நிறமுள்ளவனாயும் இருக்கின்ற இந்தக் கண்ணனுடைய கரிய கூந்தலானது சுத்தமாகும் படி.வந்து குழல் வாராய்! காக்கையே! நிர்மலமான நீலமணி நிறத்தை உடையவனது குழலைச் சீர்படுத்துவாய்! என்கிறார். இப்பாசுரத்தின் ஒவ்வொரு அடியையும் தனித்தனி வாக்யமாக்கி அதன்பின் குழல்வாராயக்காக்காய் என்று அனுபவிக்கலாம்! தூமணி வண்ணன் என்று கண்ணனைச் சொன்னதால் காக்கையையும் தூயதாய் – உள்ளம், உரை, செயல் என்ற மூன்றையும் தூய்மையாக வைத்துக்கொண்டு வா என்றும் யசோதை சொல்வதாக அனுபவிப்பார்கள்!

மூன்றாவது பாடலில் உறியில் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிய புரிகளும் பிரியாது இருக்க, பாத்திரமும் மூடிபோட்ட வண்ணமே இருக்க, இதென்ன தெய்வம் உண்டதோ என்று நினைக்கும்படி உட்கொண்டு உறங்கி விடுகின்ற ஸ்வாமியும், நித்யஸூரிகளுக்கு மிகப் பெரியவனும், இடையர்களுக்குக் கண்ணாக இருப்பவனும் ஆகிய கண்ணனாய் இருப்பவனுமாகிய இந்தக் குழந்தையை வந்து குழல் வாராய் அக்காக்காய்! கரிய மேக நிறமுள்ள இவனுடைய குழல் வாராய் அக்காக்காய்! என்று அழைக்கின்றாள் யசோதை. அனைவரும் வியக்கும்படி இவன் காரியங்களைச் செய்வான். ஆதலால் கண்கெட்ட நீயும் அவனையே கண்ணாக நினைத்து குழல் வார வாராய் என்று சொன்னார். உண்மையில் இவனே வெண்ணெய்க்கும் வெண்ணெயை வைத்தவர்க்கும் ஸ்வாமியாக இருந்தாலும் தன்னுடையது அன்று என்றது போல வேகமாக விழுங்குவானாம். அவன் விழுங்கியிருக்க மாட்டான் என்று அனைவரும் நினைக்கும்படி உறங்கியும் விடுவானாம். இப்படி தேவர்களும் அறிய அரியவனான எம்பெருமான் இங்கு இடையர் இடையிலே தோன்றி விளங்குகின்றான் என்று கொண்டாடிக் கண் கெட்ட காக்கையைக் கண்ணனையே கண்ணாகக் கொண்டு குழல் வாருவாயாக என்று ஆழ்வார் யசோதை பாவனையில் பாடுவது ரஸமானது.

நான்காம் பாசுரத்தில் கன்றுகளை மேய்த்துத் தண்ணீர் காட்ட மடுவிற்குச் சென்ற பொழுது பகாஸுரன் என்ற அஸுரன் கொக்கு வடிவில் கண்ணனை விழுங்க, கண்ணன் அவனது வாயினைத் தன் உடல் உஷ்ணத் தினால் எரிக்க, அவன் அதைத் தாங்காது கண்ணனை உமிழ்ந்து மூக்கினால் அவனைக் குத்திக் கொல்ல முயலும் போது, தனக்குள்ளே அவனை அஸுரன் என்று கண்டுகொண்டு பொதுவில் தன்னோடு உள்ள இடையர் கூட்டத்திற்கு இது ஒரு சாதாரண பறவை என்றே சொல்லி அதன் மூக்கைக் கிழித்துவிட்ட சிறு பிள்ளையான கண்ணனுக்குக் குழல் வார வாராய் காக்காயே! பேய்முலை உண்டானுக்குக் குழல் வாராய் அக்காக்காய்! என்று யசோதை அழைக்கிறாள். பூதனை இவனுக்கு உடன் பிறந்தவள். அந்த பேய்ச்சியின் விஷத்தையே ஜரித்து நிற்கும் பரஞ்சுடரை கொக்கு ஜரித்துக் கொள்ளுமோ? பறவை இனமான கொக்கைப் போல நீ ப்ரதிகூலச் செயல்களைச் செய்யாமல் அனுகூலமான கைங்கர்யத்தைச் செய்வாய் என்ற உள்ளர்த்தம் த்வனிக்க பெரியாழ்வார் பாசுரமிட்டது அழகு!

ஐந்தாம் பாசுரத்தில் நீ வராமல் இருப்பதற்குத் தகுந்த காரணங்களைப் பிதற்றி விட்டு வேகமாய்ப் பறந்து கண்ட இடங்கள் எல்லாம் திரியாமல் வந்து, கன்றுகளின் திரளை மேய்க்க வைத்து அப்பொழுது மேயாது ஒரு அஸுரக் கன்றினைப் பிடித்து விளங்கனியின் மேலே வீசிப்போட்ட பரமனான கண்ணனுடைய திவ்யமான தலைமுடியை. வாரி பரிஷ்கரிக்க வாராய்! அக்காக்காய்! திருவாழியை கையிலே உடையவனையின் திருக்குழலை வாருவதற்கு வருவாயாக! காக்கையே! என்று அழைக்கிறார். கன்றைப் போல் அவன் கைக்கு அகப்படுவதாக இருந்தால் அன்றோ என்னைப் பிடித்து எறிவதற்கு நான் வெகுதூரம் ஓடிப்போய் விடுவேன் என்கிறாயா? அவனிடத்தில் இருக்கும் திருச்சக்கரம் அவன் மனோரதத்தை அறிந்து வேலையைச் செய்யக்கூடியதாகையால் நீ எங்குத் திரிந்தாலும் உன்னிடம் தேடி வந்து உன்னை வதைக்கும் என்ற பொருளில் ஆழியான் தன் குழல்வாராய் என்று பாசுரமிட்டார் ஆழ்வார்!

ஆறாவது பாசுரத்தில் நரகாஸுரனை வதம் செய்த வ்ருத்தாந்தத்தைப் பேசி, அவனைக் கண்மூடித் திறக்கும் நேரத்தில் சக்கரத்தினால் ஒரு நொடிப்பொழுதில் வேரோடு அழித்தவனான

இந்தக் கண்ணனுக்குக் குழல் வார வருவாய் காக்காயே! கோவிந்தனான இவனுக்குக் குழல் வார வாராய் காக்காயே! என்று யசோதை அழைப்பதாகப் பாசுரமிடுகிறார். முன்பு நான் சொன்னேனே, அந்த திருவாழியினாலே அழித்தான் என்று சென்ற பாசுரத்தில் காட்டியதையும் கூட்டினார். வானத்தில் செல்லும் காக்கைக்கு வானத்தில் வீறு கொண்டு செல்லும் ஆழியைக் காட்டி பயமுறுத்துவது அழகு! கோவிந்தன் என்றதால் நரகாஸுரனை வென்று ஸ்வர்கலோகம் சென்று பாரிஜாதத்தோடும் பூமிக்கு வந்தவன் (கோ-பூமி) என்ற பொருளையும் அடக்கினார் ஆழ்வார். இப்பாசுரத்தில் தண் குழல் வாராய் என்று பாசுரம் இருப்பதால் குழல் குளிர்ந்திருக்கும் பொழுதிலேயே சிக்கெடுக்க வருவாயாக என்ற பொருளையும் ஆழ்வார் பொதித்திருக்கிறார்.

ஏழாவது பாடலில் ஒரு விசேஷமான அர்த்தத்தை இடுகிறார் ஆழ்வார். பரமைகாந்திகளைக் கைங்கர்யத்துக்கு அழைத்தார் பல்லாண்டில். யசோதையாகப் பாசுரமிட்டபொழுதும் இவருக்கு அதே நினைவு தான். ஆதலால், காக்காயைக் குழல் வார அழைக்கும் பொழுதும் பரமைகாந்தி என்னும் தன்மை மாறாது வா என்று அழைக்கிறார். இவன் இந்த அவதாரத்தில் இடையன்தானே என்று பித்ருக்கள், தேவதைகள் எல்லாம் இவனுக்கு மேம்பட்டவர்கள் என்று எண்ணாதே! என்று காக்கைக்கு எச்சரிக்கிறார். இவன் அவர்களையெல்லாம் தனக்கு உடலாகக் கொண்டவன் ஆதலால் பலியில் இட்ட பிண்டம் முதலியவற்றைத் தின்னும் நீச நிலையில் இருப்பதை விட்டு, எம்பெருமானின் அழகில் மயங்கி அவனையே அனுபவிக்கும் வண்டுகளான பரமைகாந்திகளை ஒத்து ஒரு நல்ல வைஷ்ணவ லக்ஷணத்துடன் கண்ணனின் கருங்குழலை வார வருவாய் என்றும், மாயாவியான அவனை வெறும் மனிதன் என்று எண்ணாது குழல் வார வா வென்றும் அழைக்கிறார். இத்தால், எல்லாவற்றுக்கும் பறக்கும் நம் காக்கை நிலையை உயர்த்த ஒரு வழியையும் காட்டுகிறார்.

அடுத்து எட்டாவது பாசுரத்தில், திருநாபியிலிருந்து வெளிக்கிளம்பின தாமரைப்பூவின் உருவத்தை ஒத்த தனது உந்தியில் வேதம் ஓதும் பிரும்மாவை சிருஷ்டித்தவன் இந்தக் கண்ணன். ஏ காக்கையே! இவனுடைய நெரிப்புடைய கூந்தலை புனுகு முதலிய வாசனை ஊறின தைலத்தைத் தடவி தந்தத்தினால் செய்த சீப்பினாலே வார வருவாயாக! தாமோதரனான இவனது குழலை வார உடனே வாராய்! என்று அழைக்கிறார். சதுர்முகனைப் படைக்க எழுந்த உந்தியை நான் கயிற்றினால் ஒருநாள் கட்டி வைத்தேனே என்று அவனுடைய பரத்வம், ஸௌலப்யம் இரண்டையும் சேர்த்து யசோதை அனுபவிப்பதாக பாசுரமிட்டார் ஆழ்வார்.

ஒன்பதாம் பாட்டில் அரசனாய் நின்ற மாவலியினுடைய பத்னி வித்யாவளி என்பவளும் வாமன வேஷம் கொண்டு நின்ற உன்னை கண்டு மகிழ்ச்சி அடைந்து தானம் செய்தாள். அந்த மாவலி ஆண்ட காலத்திலேயே இந்த உலகங்களை எல்லாம் இரண்டு அடிக்குள் அடக்கிய இவனுடைய அழகிய குடுமியை பூந்தலையணையின் மேலே பதிய வைத்து, இவனுக்கும் அந்த தலையணைக்கும் பின்புறத்தில் இருந்துகொண்டு காக்காயே! குழல் வார வாராய்! இவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. இப்படி உயர்ந்த திருநாமங்களைக் கொண்டவனது குழலை வார வாராய்! என்று அழைக்கிறார். தேவிமார் கண்டு மகிழ்வெய்த என்று ஆழ்வார் ஸ்வாரஸ்யமாகப் பதமிடுகிறார். வாமனன், த்ரிவிக்ரமன் என்ற இரண்டு ரூபங்களையும் அனுபவித்ததால் மாவலி பத்னி வித்யாவளிக்கு உண்டான மகிழ்ச்சியாம்! அல்லது தேவிமார் கண்டு என்றதை பெரியபிராட்டியாரும் பூமிப்பிராடியாரும் என்று எடுத்துக்கொண்டு, நாம் இருக்கும் பொழுதே இவன் ப்ரஹ்மசாரியாக வருகிறானே என்று நினைத்து முடிக்கும் முன்னமே தன் ஸ்வரூபத்தைக் காட்டினானே என்று அவர்கள் மகிழ்ந்தார்கள் என்றும் நம் பூர்வாசார்யர்கள் அனுபவிப்பர்!

இறுதியாக பத்தாம் பாசுரத்தில் தூரத்தில் இருக்கும் காக்காயே! மேக வண்ணனான கண்ணனுடைய வண்டு நிறைந்த கூந்தல் நெறித்துக் கொண்டு நிற்பதைப் பார்ப்பவர்கள் பழிப்பர் அன்றோ! அப்படி அவர்கள் பழிக்காத படி, அவன் குழலை வாருவதற்கு உடனே வா! என்று இடைச்சியான யசோதை சொன்ன வார்த்தையாய் உள்ள, ஆகாயத்திலே கலந்து நின்ற மதில்களை உடைய, ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வாஹரான பட்டநாதருடைய சொற்களால் ஆன இந்தத் திருமொழியைப் பதங்களையும் பொருள்களையும் சிலாகித்து பாடினால் பாபங்கள் அணுகாது, தாமாகவே ஓடும் என்று இந்தப் பத்துப் பாடல்களுக்கும் பலன் கூறித் தலைக் கட்டுகிறார் ஆழ்வார்.

முன் திருமொழிக்கு மஞ்சனமாட்டினால் குணுங்கும் புழுதியும் போவது போல தீவினை யாதும் இல்லாதவராவார் என்று பலன் கூறினார். இந்தத் திருமொழிக்குக் குழல் வாரினால் சிக்கு போவது போல இதை ஓதினால் வினைகள் குறுகாது என்று பலன் கூறினார். வினைகள் தாமாகவே போகும். அதற்கென்று நாம் விசேஷமாகச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்று கூறுகிறார். உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களை, புராண இதிஹாஸ வ்ருத்தாந்தங்களை எளிய பிள்ளைத்தமிழ் இலக்கியமுகமாக நமக்கு ஆழ்வார் அருளிச்செய்கிறார்.

***(தொடரும்...)***

ஸ்ரீ:

# வசைமொழிகள் கூறும் தத்வார்த்தம்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

வேயர்புகழ் வில்லிபுத்தூரும் ஆடிப்பூரமும் மிக விளங்குமாறு விட்டுசித்தனின் அமலமான திருமகளாய் அவதரித்தவள் கோதை நாச்சியார். அரங்கனுக்குத் தானணிந்த துழாய்மாலையினை சூடிக் கொடுத்தவள், ஆச்ரிதர் உய்யவென முப்பதும் (திருப்பாவை), நூற்று நாற்பத்தி மூன்றுமென (நாச்சியார் திருமொழி) பாமாலையினைப் பாடிக் கொடுத்தாள். சதுர்வேதங்களின் அர்த்தத்தினை ஸாரமாகக் கொண்ட அவளது பாசுரங்கள், விசிஷ்டாத்வைதத் தத்வங்களை ஜ்ஞானஹீனர்களும் லகுவாகக் க்ரஹித்துக்கொள்ள ஹேதுவாக அமைந்ததனால், திருப்பாவை வேதம் அனைத்திற்கும் வித்தானது.

சேதனர்களின் ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு வகைசெய்யும் உயர்ந்த தத்வார்த்தங்களைக் கொடிருந்ததனாலும், கோதை பாவை நோன்பு நோற்ற மார்கழி மாதம் தரணியெங்கும் கொண்டாடப்படுவதினாலும் திருப்பாவை ப்ரபலமானது. மார்கழித் திங்கள் ஒன்று தான் கோதைக்கான மாதம் என்ற மாயபிம்பம் உண்டானது.

**தையொரு திங்களும் தரை விளக்கித் தண் மண்டலமிட்டு**

**மாசி முன்னாள் ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து அலங்கரித்து**

**வைகல் தெருவிடை எதிர் கொண்டு பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன்**

இவை நாச்சியார் திருமொழியின் பதங்கள். இவற்றின்படி பார்த்தால், மார்கழி மட்டுமல்லாமல், (நாச்சியார் அவதரித்த) ஆடி, தை, மாசி, பங்குனி ஆகியவையும் ஆண்டாள் பாசுரங்கள் பெற்ற மாதங்கள் ஆகின்றன. திருப்பாவையினைப் போலவே நாச்சியார் திருமொழியும் விசிஷ்டாத்வைத தத்வார்த்தங்கள் பலவற்றை அடிப்படையாகக் கொண்டு உயர்ந்த நல் அநுபவங்களைச் சேதனர்களுக்கு அநுக்ரஹிக்கிறது.

**வெறுத்துச் சொல்வது வெறுப்பினாலா?**

க்ஷீராப்திநாதன் பல அவதாரங்களைக்கொண்டு காத்தருளியது பூமிப் பிராட்டியினைத் தான். ஆழ்வார்களுள் அந்த பரமனை அதிகமாகத் தூற்றியது அந்த பூமிப் பிராட்டியின் அம்சமான நாச்சியார் தான். நாச்சியார் திருமொழியில் பற்பல ஸ்ரீஸூக்திகளில் எம்பெருமானைப் பலவிதமான திருநாமங்களைக் கொண்டு வெறுத்துச் சொல்கிறாள் பெரியாழ்வார் புத்ரி. உதாஹரணமாக,

*யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத |*
*அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்||*

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி** – எப்பொழுதெல்லாம் தர்மத்திற்கு ஹானி ஏற்படுகிறதோ, **அப்யுத்தாநம் அதர்மஸ்ய** – அப்பொழுதெல்லாம் அதர்மமானது அபிவ்ருத்தியாகும். **ததா** – இப்படி தர்மம் க்ஷீணித்து, அதர்மம் வ்ருத்தியாகும் போது, **ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்** – நானே என்னைப் ஜனிக்கப் பண்ணுவேன். இது கீதாசார்யன் திருவாக்கு. அதர்மத்தினை அழித்து தர்மம் செழிக்கச் செய்வேன் என்ற ஸத்யஸந்தனை **தருமமறியாதவன்** என்கிறாள் கோதை நாச்சியார்.

இப்படி, ரங்கமன்னாரின் நாயகி தனது நாயகனை வெறுத்துச் சொல்லும் திருநாமங்கள் சிலவற்றில் அந்வயித்து, அவற்றின் மூலம் அவள் உணர்த்திய ரஹஸ்யார்த்தங்களை அறிவோம்.

**நிர்பரோ நிர்பயோஸ்மி**

குறையொன்றும் இல்லாதவன் கோவிந்தன் என்று பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நமக்குக் காண்பித்துக் கொடுத்தவளே, அவன் **தீமை செய்யும் சிரீதரன்** என்கிறாள்.

**நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா நரனே...** (2-1). தானே எல்லாம் என்று தன்னை நம்பி இருக்கும் கோதையினைக் காமன் போன்ற க்ஷுத்ர தேவதையிடத்திலே செல்லும்படியாகத் தான் கைவிட்டதை எண்ணி க்லேசம் கொண்டு எம்பெருமான் அவள் சிற்றில் இழைக்கும் (கோலம் போடுவது) இடத்திற்கு வர, அவளோ அவன் தனது சிற்றில்களைக் கலைக்கவே வருகிறான் என்று கோபம் கொண்டு ஸேவித்த பாசுரம் இது.

தான் இடும் கோலத்தினை எம்பெருமான் கலைக்கக் கூடும் முதலில் என்று அஞ்சி **தீமை செய்யும் சிரீதரா** என்று கூப்பிடுகிறாள், **உன்தன்னோடு உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது** என்றவள். பின்னர், அவனைத் தன்வசப்படுத்த அவன் திருவடிகளிலேயே சரண் அடைகிறாள், பெரியாழ்வார் புத்ரி. **நிர்பரோ நிர்பயோஸ்மி** – சரணாகதி என்று அவனது திருவடியில் தனது பரத்தை ஸமர்ப்பித்து அவன் இனி தனது சிற்றில்களை கலைக்க மாட்டான் என்று பயமற்று இருக்கிறாள்.

நாம் அடைய வேண்டிய உபேயம் ஆகும் அவனே அதற்கான உபாயமும் ஆகிறான் என்று அவன் ஸ்வரூபத்தினை நமக்குக் காண்பித்துக் கொடுக்கிறாள் தன் ஸ்வரூபம் அறிந்தவள்.



**அனைத்தும் அவனது அதீனம்**

**கடலே கடலே உன்னைக் கடைந்து** (10-9) என்று தொடங்கும் பாசுரத்தில், கலக்குறுத்து உடலுள் புகுந்துநின்றூறல் அறுத்தவற்கு **என்னையும் உடலுள் புகுந்து நின்றூறல் அறுக்கின்ற மாயற்கு** என்கிறாள். அதாவது, ஸமுத்ரத்தினைக் கடைந்து அதனுள் இருந்த அம்ருதத்தினைக் கொண்டதைப் போல இவளுள் புகுந்து இரக்கமில்லாது இவளது ப்ராணனைக் கொண்டான் அந்த மாயாவி என்கிறாள்.

இந்தப் பதங்களைக் கொண்டு, எம்பெருமானின் அந்தர்யாமித்வத்தினை உணர்த்துவதோடு சேதனவர்கங்களின் ப்ராணன் உள்பட அனைத்துமே அவனது அதீனத்திற்குட்பட்டது என்பதையும் நிஷ்கர்ஷிக்கிறாள்.

**தன்னிகரில்லாதவன் தன்னடியார்க்கினியன்**

நாச்சியார் திருமொழியின் பதினான்காம் (கடைசி) தசகத்தின் அனைத்து பாசுரங்களிலும் முதல் இரண்டு வரிகளில் அந்த ஜகந்நாதனை வெறுத்துச் சொல்பவள், பின்னிரண்டு வரிகளில் அவனது ஏற்றத்தினைக் கூறுகிறாள். உதாஹரணத்திற்குச் சிலவற்றைக் காண்போம்.

**மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை** (14-3) எனும் பாசுரத்தில், **ஏலாப் பொய்கள் உரைப்பானை** என்று கூறி, அந்த ஸத்யஸந்தனைப் பொய்யன் என்கிறாள், அவனே பரிபூர்ணமான ஸத்யம் என்று உணர்ந்தவள்.

**தருமம் அறியாக் குறும்பனைத் தன் கைச் சார்ங்கம் அதுவே போல்** (14-6) என்று ஸேவித்து, அடாதன செய்யும் அதர்மி என்று அவனைத் தூற்றுகிறாள், அந்த தர்மவானுடனான ஸம்ச்லேஷத்திற்கு ஏங்கும் பேதை.

**பொருத்தம் உடைய நம்பியைப் புறம்போல் உள்ளும் கரியானை கருத்தைப் பிழைத்து நின்ற அக்கருமா முகிலைக் கண்டீரே?** (14-7) என்கிறாள், தனது கூக்குரலுக்குச் செவி சாய்க்காது இவள் படும் பாட்டை ரசிப்பவனை. அவனது திருமேனி வண்ணத்தினைப் போல அவனது திருவுள்ளமும் (தயை என்பதறியாது) கருத்ததே என்று சாடுகிறாள், அவனை அணுஅணுவாக ரசிப்பவள்.

**கருத்தைப் பிழைத்து நின்ற** என்றுரைத்து தனது கருத்துடன் ஒத்துப் போகாது எதிர் கருத்தினைக் கொண்டவன் என்று அவனைத் தூற்றுகிறாள். ஜீவாத்மாவைக் கைக்கொள்ளும் காலத்திற்காக பரமாத்மா காத்திருக்க, ஜீவாத்மாவும் ஜன்மம் எனும் வ்யாதியிலிருந்து மீண்டு அந்தப் பரமனின் திருவடி அடையும் காலத்திற்காகக் காத்திருக்கிறது. ஒத்த கருத்தினை உடைய இருவர் பிரிந்து வாடி ஜீவாத்மா-பரமாத்மா உறவினை சேதனர்களுக்குப் புரிய வைக்கின்றனர்.

**ஸ்வாதந்த்ரியமும் பாரதந்த்ரியமும்**

**பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்கு பண்டொருநாள் மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்** (11-8). வராஹ அவதாரம் கொண்ட போதில், தனது திருமேனியில் சாரமான ஜலம் வடிய மானம் இல்லாத பன்றி உருவினைக் கொண்டவன் என்று அவனை ஏளனமாகக் கூறுபவள், அடுத்த வரியில் அவன் மிக்க ஒளியுடைய **(தேசுடைய தேவர்) திருவரங்கச் செல்வனார்** என்று புகழ்கிறாள். அப்படிப்பட்ட அந்த முதல்வன் **பேசி இருப்பனகள் பேர்க்கவும் பேராவே** - அடியாளிடம் முன்னம் பேசிய விஷயங்களை ஹ்ருதயத்திலிருந்து நீக்க முடியாது தவிப்பதாகக் கூறி அவனது ஸங்கல்பமே ஸத்யம் மற்றெல்லாம் பொய்மையே என்பதை உணர்த்துகிறாள்.

பரம சேதனான பகவானின் ஸ்வதந்த்ர கர்த்ருத்வத்தினைக் காண்பிப்பதுடன் சேதனர்களின் பரதந்த்ர கர்த்ருத்வத்தினையும் தெளிவுற உணர்த்துகிறாள்.

நாச்சியார் திருமொழியின் பதிமூன்றாம் தசகத்தில் கடைசி பாசுரத்தினை **அல்லல் விளைத்த பெருமானை** (13-10) என்று அவனைத் தூற்றித் தொடங்குகிறாள் கோதை. அப்பெருமானின் அடிமையாம் தான்

சொன்ன **(வேட்கையுற்று மிகவிரும்பும்)** வார்த்தைகளைத் துதிப்போர் **துன்பக் கடலுள் துவளாரே** என்று கூறி, அவனைக் கூடாதிருத்தலே துன்பக் கடல் என்பதைக் காண்பிக்கிறாள். ஜீவாத்மா-பரமாத்மா விச்லேஷம் (பிரிந்திருத்தல்) அல்லல் என்கிறாள்.

**குறையொன்றும் இல்லாத கோவிந்தன்**

நூறு தடா வெண்ணையும் நூறு தடா அக்காரவடிசிலும் ஸமர்ப்பிப்பேன் என்று திருவுள்ளம் பற்றினவள் பழிப்பதாய் அமைந்த இந்த வசை மொழிகள், அந்த மாயாவியின் மீது அவள் கொண்டிருந்த மையலினைக் காட்டியது. கோதையின் இத்தகைய வசை மொழிகள் அவளது மன்னவனாம் கண்ணனின் திருவுள்ளத்திற்கு உகப்பே என்பது திண்ணம். நாச்சியார் திருமொழியின் கடைசி தசகத்தினில் **(பட்டி மேய்ந்து)** தனது ஹ்ருதயம் கவர்ந்தாளுடன் அந்த மாயோன் கூடியதே இதற்கு நிரூபணமாகிறது.

மார்கழியில் திருப்பாவை ஸேவித்த கோதை, பின் வரும் ஆடி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களிலும் அதற்கான ப்ரயத்தனங்களைத் தொடர்கிறாள். அவற்றில் ஏதேனும் அபசாரம் நேருமோ என்று எண்ணி, தன்னைக் காத்துக் கொள்ள அவள் செய்த முன்னேற்பாடே **கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்** என்ற திருப்பாவை பாசுரம் (28). அந்தப் பரமன் இவள் மீது சீற்றம் கொள்ளலாகாது என்பதற்கான காரணத்தை முதலிலேயே கூறி விடுகிறாள். அதாவது, ஏதோ பூர்வ ஜன்ம ஸுக்ருதத்தினால் **கோவிந்தா உன்தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்.** உன்பால் அடியோங்கள் கொண்ட ப்ரேமையினாலும் – **அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து அறியாத பிள்ளைகளோம் அன்பினால்** – நாங்கள் உன்னை சிறுபேரழைக்கக் கூடும். அப்படி நாங்கள் **உன்தன்னைச் சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே** – அவனது சீற்றமும் அநுக்ரஹமே என்பதை நமக்குக் காண்பிக்கிறாள். **உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது** என்று சாச்வதமானது அவனுடனான உறவு ஒன்று மட்டுமே என்பதை நமக்கு உணர்த்துகிறாள்.

தான் யார், தனது மன்னன் யார் என்பதை எல்லாம் நன்கு உணர்ந்திருந்த கோதை நாச்சியார் அநுபவித்த பரிச்ரமங்கள் அனைத்துமே, தாம் யார் என்பதைக் கர்மபத்தர்களாகிய நாம் உணர வேண்டும் என்பதற்காகவே. நமது கர்மாக்களினைக் கழிக்கவென எம்பெருமானிடமிருந்து அவனது சொத்தான ஆத்மாவினைக் களவு கொண்டு வருகிறோம். சுத்த ஸத்வ வஸ்துவாம் ஆத்மாவினைக் கொண்டு கர்மாக்களைக் கழிக்க முடியாது. தனது சொத்தான ஆத்மாவைக் களவு கொண்ட நம் மீது சீற்றம் கொள்ளாது, பரம காருண்யனான பிராட்டிமணாளன் ஒரு தேஹத்தினை நமக்கு (ஜீவாத்மாவிற்கு) அருளுகிறான். இருப்பினும், பரமாத்மாவினை விட்டு நீங்கி, நாட்டில் பிறந்து படாதன படுவதென்பதன் கொடுமையினை உணரும் ஜீவாத்மா அநுபவிக்கும் பரிச்ரமங்களே கோதை நமக்குக் காண்பிக்கும் ஸத்யம். எப்பாடுபட்டேனும் பரமாத்மாவினை அடைந்து விடவேண்டுமென்ற ஜீவாத்மாவின் வேட்கையினைத் தான் படும் அல்லல்களாக கோதை காண்பித்தது இந்த ஸத்யத்தினை நாம் உணர வேண்டும் என்பதற்கேயாம்.

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே! வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர், சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

# Important Tenets Of Our Sampradaya (4)

## Bhara Nyaasam and Grantha Kalakshepam

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

**Bhara Nyaasam**

It is the doctrine of whole-hearted and absolute surrender of the soul to the Lord. Bhaara Nyasam, Prapathi and Saranaagathi are one and the same by which the Jivathma submits his/her soul, the burden of saving it and the reward for the act to the Lord Himself (Athma Samarpanam, Bhara Samarpanam and Phala Samarpanam). The knowledge of Thathva Thrayam – the Triple Truth – is very essential to understand the three Rahasyas mentioned earlier. They are: Chith (the sentient soul - Jivathma), Achith (the non-sentient material - non-living things) and Iswara (Paramaathma Sriman Narayana - the Supreme Lord).

The procedure of Prapathi consists of five parts (Angaas) and with the encompassing parcel (Angi), the submission of the burden of the soul is performed. They are:

- **Aanukoolya Sankalpam:** Commitment to do always only what will be pleasing to the Lord, as laid down in the Saasthras;
- **Praathikoolya Varjanam:** Commitment to desist from doing what will be displeasing to Him;
- **Aakinchanyam:** Clear consciousness of one’s destituteness or inability as regards anything and that he cannot, by his own effort, attain salvation;
- **Mahaa Viswaasam:** Absolute and unwavering faith in one’s redeemability through Him and that He alone can grant Moksha;
- **Gopthruthva Varanam:** Uttering one’s decision to take His safe refuge for salvation; and
- **Athma Samarpanam:** Transferring the burden of the soul by entrusting the responsibilities with Him.

Prapathi can be performed in three modes, namely, Swanishta (doing it oneself which only qualified persons can do); Ukthi Nishta (doing it through an Acharya by repeating the Manthras he utters) and Acharya Nishta (the Acharya doing it all on behalf of the disciple in his presence).

**Grantha Kaalakshepam**

Our preceptors have earmarked four important Sampradaya Granthas as imperative to be studied under an Acharya. They are: Sri Ramanuja’s Sri Bhashyam and Gita Bhashyam, Bhagavath Vishayam, being Commentary for Thiruvoymozhi and Swami Desika’s Srimath Rahasya-thraya Saaram. These are collectively known as Grantha Chathushtayams (The four works). One must strive to learn as many as possible, if not all of them.

Thus, the Guru-Sishya connection is established through the above deeds and it is the bounden duty of every Srivaishnava to identify himself with our Sampradaya. Those who already have had the privilege of performing Samaasrayanam and Bhara Nyaasam, should approach an Acharya and learn the philosophy-defining works, if not done already. And those who have not yet had the Pancha Samskaram and/or Bhara Nyaasam should have them performed at the earliest.

Acharyas are the cornerstones of our Sampradaya. Is there need for any proof when the Lord holds them in the same exalted pedestal as that of Himself?

***(to be continued…)***

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ④

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter – 3:**

**Pradhana Prathithantra Adhikaram**

As said earlier, Pradhana Prathithantram is that concept unique to a particular philosophy which is not accepted in other philosophies. In Ramanuja Darsana or Visishtadvaita philosophy, this is Sarira-Sariri Bhavam. Isvara is the Sariri and all sentient and non-sentient matter is His Sariram.

Isvara is the One who holds, orders, and controls all matter. Hence, He is Sariri. All sentient and non-sentient beings are held by Him, subservient to Him and controlled by Him. Hence, they are His Sarirams. All matter is Aadheyam (held), Vidheyam (subservient) and Sesham (controlled).

To explain this further, our Athma is Sariri of our body. It holds the body together. Once Athma leaves the body we see that it disintegrates. It orders the body to eat, go here, there, lie down etc. It controls the body to act as per its will. Similarly, Bhagavan is the Sariri of all our Athmas. This is the underlying premise upon which the whole edifice of Visishtadvaitam rests.

Bhagavan, by his Svarupa (form) & Sankalpa (will), enables the matter's being (Svarupa), continued existence (Sthithi) and actions (Pravruthi). His Svarupa holds all beings (Aadharam). The qualities present in the matter are held by Him through that matter. What about the bodies held by Jeevas? They are held directly by Him and, also through Jeevas, as per Swami Desikan. In effect, if something exists, it is because of Bhagavan's Svarupa and Sankalpa. All matter is irrevocably bound to His



Svarupa. This is called Apruthaksiddha Sambandham. This is essential for Sarira-Sariri Bhavam.

One can hold a pot but only for some time. For the connection to be eternal, the pot should be eternal, and the holder should also be eternal. Here Paramathma, Jeevathma & Prakruthi are all eternal and hence the connection too is eternal. A king can order his subjects, but he might be defeated by another king. Similarly for control. So, Bhagavan is the ultimate Sariri of all, by his Svarupa.

Now, a question might arise, if Jeevas are eternal and not created & Prakruthi is eternal and not created, how is Bhagavan the Sariri of all? There are 3 Nithya Thathvas – Chethanam (sentient), Achethanam (non-sentient) and Isvara. But Nithya Thathva are Nithya because He willed it so. Anithya matter (mortal things) are created and destroyed as per His will (Sankalpa), too. Let this be Nithyam, let this be Anithyam… all this is His Sankalpam. So, He is the ultimate controller.

When we say He holds non-sentient matter (Aadharam), it doesn't mean that he physically carries them, but He

ensures that heavy matter like the Sun or Moon don't fall from their axes, the seas and directions do not turn from their paths, and so on.

When Isvara can hold all matter by His will, why should He hold them by his Svarupa? It is so that all beings gain by being part of His Svarupa. All actions (Pravruthis) are held by His Sankalpa. Thus, all beings are held by Svarupa & controlled by Sankalpa.

To understand this, let us take the case of a man. When he is awake, he holds his body which is evident. When he is asleep, what holds the body? He holds it thorough his Svarupa i.e., Athma. When he is awake, it is his will which controls the body (Sankalpa) not to fall etc. when he is asleep it is the Svarupa. So, the Sariram is held by both Svarupa and Sankalpa. Similarly, Bhagavan holds our Athmas by Svarupa and Sankalpa.

Thus, a Chethana, if he learns this, would realise that he has no other hold than Bhagavan (Ananyadharan), attaining Bhagavan is his goal (Ananya Prayojanan) and He is the means Himself (Anayasharanam).

That Chethana is all three above can be gleaned from the three Rahasyas. Here, Sanskrit grammar is used to establish that Ashtaksharam gives out this meaning. It is very technical and hence I desist from expanding on it. Suffice it to say, these will be dealt with in detail in later chapters specifically dedicated to the three Manthras.

Here, Swami quotes his uncle Sri Kidambi Appullar who took examples from Ramayana to illustrate the Thathvas in Ashtakshara. It is like a small mirror which can reflect huge things (based on the distance). The Pranava consists of three letters – first letter 'A' is Vishnu (Akarena Uchyate Vishnu:), Sri Rama followed by Sita Piratti – between Rama and Lakshmana – who is 'U' and Lakshmana at the rear, who is a Jeeva, and hence 'M'. AUM (அ + உ + ம) is the Pranava; 'Namo' is illustrated by the lives of Bharatha and Shatrughna – Bhagavath Seshathvam and Bhagavatha Seshatvam; Narayana Sabdam, by the citizens of Ayodhya where trees shed their leaves in spring when Rama was in the forest but blossomed in fall season when He returned and finally 'Aya' Sabdam denoted by the Kainkaryams of Lakshmana and Sri Padhukas.

Seshathvam is common to sentient and non-sentient beings and, hence, sentient beings or Chethanas' connection to Bhagavan is separately characterised as Swami-Dasa connection too (Sambandham).

***to be continued…)***


**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

**பித்ரு காரியங்கள் செய்வதற்கு,**
**சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.**

விவரங்களுக்கு தேவஸ்தான
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி: 044-2495 3799.



*With Pranams:*

**Sridhar Parthasarathy & Family,**

Luz Church Road,
Mylapore, Chennai - 600 004.
Mobile No. 95666 73991.

**SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam



நாதமுனிகள் திருநக்ஷத்ரம்







ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்